மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம் , இராதாபுரம்.

முன்னிலை - திரு.மு.ஆனந்த், பி.ஏ., பி.எல்.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராதாபுரம்.

2025 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 07 ஆம் நாள் வெள்ளிகிழமை

**இடைக்கால மனு எண் 03/2024**

**இன்**

**அசல் வழக்கு எண். 56/2022**

1) தேவதாஸ்

2) சுபா .... மனுதாரர்கள்/ 1,2 பிரதிவாதிகள்

// எதிர்//

திரவியதாஸ் .... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனுவானது 25.06.2024-ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு 30.01.2025-ம் தேதி அன்று என் முன்னால் விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.மாரிசெல்வன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.ரெங்கசாமி அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இதுநாள் வரை இந்நீதிமன்றம் பரிசிலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

1) மனுதாரர்கள்/பிரதிவாதிகள் உரிமையியல் விசாரணை முறைச்சட்டம் கட்டளை 7 விதி 11 மற்றும் பிரிவு 151-ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **மனுவின் சுருக்கம்**

மனுதாரர் அசல் வழக்கில் 1ம் பிரதிவாதி, 2ம் மனுதாரர் 1ம் மனுதாரரின் மனைவியும், அசல் வழக்கில் 2 ம் பிரதிவாதியும் ஆவார். மனுதாரர் இந்த மனுவை 2 ம் மனுதாரருக்காகவும் சேர்த்து தாக்கல் செய்துள்ளார். மனுதாரர்கள் அசல் வழக்கில்



ANAND M Digitally signed by ANAND M Date: 2025.02.07 16:29:45 +0530

தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையை இதன் அங்கமாக பாவித்துக்கொள்ள வேண்டியுள்ளார்.

3) இந்த எதிர்மனுதாரர், அசல் வழக்கில் வாதியாக இருந்து வழக்கு சொத்து ஆதியில் அவருடைய தாத்தா பொன்தாஸ் காங்கேயருக்கு பாத்தியப்பட்டிருந்து. அவருடைய காலத்திற்கு பிறகு தனது தந்தை சீனிவாசக தாஸிற்கு பாத்தியப்பட்டு, அவருடைய காலத்திற்கு பிறகு மனுதாரருக்கு மட்டும் கிடைக்கப்பெற்று அனுபவித்து வருவதாக கூறி, மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக 2 ம் மனுதாரர் பெயரிலான Settlement ஆவணம் செல்லாது என்றும், அவருடைய அனுபவத்திற்கு இடையூறு செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துகட்டளை பரிகாரம் கோரியும் வழக்கியை தாக்கல் செய்துள்ளார்.

4) இவ்வழக்கில் இந்த எதிர்மனுதாரர் மேற்படி பொன்தாஸ் காங்கேயருடைய சொத்துக்களை அவருடைய தகப்பனார் சீனிவாசகதாஸ் மட்டுமே அடைந்ததாக கூறியுள்ள போதிலும், பொன்தாஸ் காங்கேயிருக்கு, பரமானந்ததாஸ், சீனிதாஸ். பாக்கியதாஸ், முத்தையா தாஸ், தாசையா தாஸ் (மனுதாரர்களின் தாய்வழி தாத்தா) மற்றும் எட்வர்ட்தாஸ் என மொத்தம் ஆறு மகன்கள் இருந்துள்ள விபரத்தினை மறைத்துள்ளார். மேலும் பொன்தாஸ் காங்கேயருக்கு ஆறு மகன்கள் இருந்துள்ள நிலையில் மனுதாரருடைய தகப்பனார் சீனிவாசகதாஸ் (சீனி தாஸ்) மட்டும் சொத்தினை எவ்வாறு அடைந்தார் என்று எதிர்மனுதாரர் வழக்குரையில் எந்தவொரு இடத்திலும் குறிப்பிடவில்லை. மேலும் தன்னுடன் பிறந்த மூன்று உடன்பிறப்புகள் குறித்தும் இந்த எதிர்மனுதாரர் வழக்குரையில் எதுவும் தெரிவிக்கவில்லை. பொன்தாஸ் காங்கேயரின் இறப்பிற்கு பிறகு, அவர் எந்த ஒரு விருப்புறுதி ஆவணமும் இன்றி இறந்துள்ள நிலையில், அவருடைய சொத்துக்கள் அவரது ஆறு மகன்களுக்கும் சமமாக சென்று அடைந்துள்ளன.

5) இந்த 1ம் எதிர்மனுதாரர் பொன்தாஸ் காங்கேயரின் வாரிசுகளில் ஒருவரான தாசையா தாஸின் மகள்வழி பேரன் ஆவார். மேலும் வழக்கு சொத்து மற்றும் இன்ன



ANAND M Digitally signed by ANAND M Date: 2025.02.07 16:29:52 +0530

பிற சொத்துக்கள் பொருந்து 31.05.1993 தேதிய விருப்புறுதி ஆவணத்தின் அடிப்படையில் தனக்குரிய உரிமையினை இந்த 1ம் மனுதாரருக்கு மேற்படி தாசையா தாஸ் பாத்தியயபடுத்தி கொடுத்துள்ளார். எனவே தனது தகப்பனாருக்கு மட்டும். அவரது உடன்பிறந்தவர்கள் ஐவரையும் நீக்கி எவ்வாறு சொத்துக்கள் கிடைக்கப்பெற்றன என்ற விபரத்தினை எதிர்மனுதாரர்/வாதி தெரிவிக்காததினால் அவருக்கு இந்த வழக்கினை தாக்கல் செய்ய வழக்கு மூலம் இல்லை. மேலும் முக்கிய கருப்பொருளான தனது தகப்பனரின் உடன்பிறந்த சகோதரர்கள் ஐவர்கள் குறித்தும் இந்த 1ம் மனுதாரர் தன்னுடைய தகப்பனாரின் உடன்பிறந்த சகோதரரின் மகள்வழி பேரன் என்பதையும் மறைத்து எதிர்மனுதாரர்/வாதி இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார்.

6) என்வே இந்த வழக்கானது முக்கிய கருப்பொருளை மறைத்த (Suppression of Material facts) குறைப்பாட்டிற்கு உட்பட்டுள்ளது. இந்த மனுதாராகளின் வாய்மொழி பாகம் குறித்த வழக்கினை ஏற்றுக்கொள்ளாவிடினும் இந்த எதிர்மனுதாரர்/வாதி தனக்கு ஏதேனும் வழக்கு இருப்பின் பாகப்பிரிவினை கோரி மட்டுமே வழக்கு தாக்கல் செய்திருக்க முடியும், ஆனால் எதிர்மனுதாரர்/வாதி வாய்மொழி பாகம் குறித்து நன்கு அறிந்தும் தனது தகப்பானாரின் உடன் பிறத்துள்ளவர்கள் ஐவர்கள் குறித்தும் இந்த மனுதாரர்க்கும் தனது சித்தப்பா தாசையா தாஸிர்க்கும் இடையேயான உறவுமுறை குறித்தும் இந்நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்தாமல் மறைத்து இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார். தனக்கு வழக்கில் கோரியுள்ள எந்தவொரு பரிகாரத்தினை பொருத்தும் வழக்கினை தாக்கல் செய்ய இயலாது என்பதையும், இம்மாண்புமிகு நீதிமன்றத்தின் முன்பு தனக்கு எந்த ஒரு பரிகாரமும் கிடைக்காது என்பதையும் நன்கு அறிந்து, வேண்டுமென்றே மாண்பமை நீதிமன்றத்தினை ஏமாற்றி உத்தரவு பெறவேண்டும் என்ற நோக்கில் தனது தகப்பானாரின் உடன் பிறந்த ஐந்து சகோதரர்கள் குறித்தும், அவர்களுக்கு சொத்து சென்றடைந்த உண்மையை மறைத்தும், தான் ஏற்படுத்திக்கொண்ட வாய்மொழி பாகத்தினை



ANAND M
Digitally signed by ANAND M
Date: 2025.02.07 16:29:58 +0530

மறைத்தும், தனக்கு மூன்று உடன்பிறப்புகள் உள்ள விபரத்தை மறைத்தும், இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார்.

7) மேலும் இந்த எதிர்மனுதாரர் இந்த வழக்கினை மாண்புமிகு நீதிமன்ற நடைமுறைகளை தவறான முறையில் பயன்படுத்தி (Abuse of Process of law) எங்களை சிரமப்படுத்த வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடனேயே தாக்கல் செய்துள்ளார். அசல் வழக்கில் இந்த எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள 27.09.2021 தேதியிட்ட திருநெல்வேலி மாவட்ட பதிவாளர் அவர்களின் உத்திரவில் குறிப்பிட்டுள்ள தொடர்புடைய மனுவில் இந்த எதிர்மனுதாரர் வழக்கு சொத்து குறித்து பொன்தாஸ் காங்கேயருக்கே உரிமை இல்லை என்று வாதம் புரிந்துள்ளார். இதன் மூலம் அவருடைய நோக்கம் எங்களை சிரமப்படுத்த வேண்டும் என்பது மட்டுமே என்பது தெளிவாக புலனாகும்.

8) எனவே இந்த எதிர்மனுதாரரின் வழக்கினை அவர் எவ்வித வழக்கு மூலமும் இன்றி முக்கிய கருப்பொருட்களை மறைத்து, நீதிமன்ற நடைமுறைகளை தவறாக பயன்படுத்தி மனுதாரர்களை சிரமப்படுத்த வேண்டும் என்ற கெட்ட நோக்கத்தில் தாக்கல் செய்துள்ளதால் இந்த எதிர்மனுதாரரின் அசல் வழக்கினை நீக்கரவு செய்து தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டுமென்று கட்சி செய்துள்ளார்கள்.

9) **<u>எதிருரையின் சுருக்கம்</u>**

வழக்கு பிரதிவாதி தாக்கல் செய்துள்ள கூடுதல் வழக்குரையில் தெரிவித்துள்ள காரணங்கள் ஏற்புடையதல்ல. பிரதிவாதியின் தாத்தா பெயர் தேவதாஸ் என்பதாகும். பிரதிவாதியால் தாக்கல் செய்துள்ள உயில் ஆவணத்தில் தாசையா கோனார் என்று பதியப்பட்டுள்ளது. இந்த ஆவணம் பிரதிவாதியால் தயார் செய்யப்பட்டுள்ளது போல் தெரிகிறது.

10) தாவா நிலமான திருவம்பலபுரம் கிராம் அ.பு.ச. எண். 283/3 என்பது பிரதிவாதியின் தாத்தாவான தேவதாஸ் என்பவருக்கு எதனடிப்படையில் பாத்தியப்பட்டது என்று பிரதிவாதியால் தெளிவுபடுத்தப்படவில்லை.



ANAND M Digitally signed by ANAND M Date: 2025.02.07 16:30:04 +0530

11) திருவம்பலபுரம் கிராமம் புல எண். 283/2 ஐ புல எண். 283/3A மற்றும் 283/3B ஆக உட்பிரிவு செய்யப்பட்டதை பிரதிவாதி தரப்பில் ஆட்சேபனை செய்யப்படவில்லை. தாவா நிலத்தின் மேல் இராதாபுரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண். 1629/2004, 5491/2012, 1039/2012, 2374/2022, 2375/2022, 2376/2022, 1039/2019, 1800/2019 மற்றும் 3011/2017 ஆகியவை பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட ஆவணங்கள் எழுதிக் கொடுத்த யாரும் பொன்தாஸ் காங்கேயர் வாரிசுதாரர்கள் இல்லை. இதை பிரதிவாதி எந்த ஆட்சேபனையும் செய்யவில்லை. ஆனால் வாதி மேற்கண்ட ஆவணங்கள் எழுதிக் கொடுத்த நபர்கள் மேல் மாவட்ட காவல்கண்காணிப்பாளர் நில அபகரிப்பு பிரிவு திருநெல்வேலியில் புகார் மனு கொடுத்து விசாரணையின் முடிவில் 30.09.2019 நீதிமன்றத்தில் பார்த்துக் கொள்கிறோம் என்று ஆவணங்கள் எழுதிக் கொடுத்த அனைவரும் வாக்குமூலும் எழுதிக் கொடுத்துள்ளார்கள்.

12) புல எண். 283/3A ல் நான்குமால் எல்கையாக (மேற்கு) மாடசாமி கோனார் நிலம், (கிழக்கு) புல எண்.283/3A ன் மீதி நிலம், (வடக்கு) கிழமேல் ரோடு, (தெற்கு) 283/3A ன் மீதி நிலத்திற்கு உட்பட்ட ஏக்கர் 2 செண்ட் 60 நிலம் பிரதிவாதிக்கு எதனடிப்படையில் பாத்தியப்பட்டது என்பதை மாண்புமிகு நீதிமன்றத்தில் பிரதிவாதியால் தெளிவுபடுத்தவில்லை. பூர்விக சொத்தை உயில் ஆவணம் எழுதி கொடுக்க சட்டத்தில் இடம் இருக்கிறதா என்பதை மேற்கண்ட உயில் உண்மையான ஆவணம் தானா என்பதையும் பிரதிவாதி தான் கனம் நீதிமன்றத்தில் நிரூபிக்க வேண்டும்.

13) எனவே பிரதிவாதியின் கூடுதல் வழக்குரையில் கூறப்பட்டவை அனைத்தும் பொய் என முடிவு செய்து வாதி கோரியபடி தீர்ப்பாணை வழங்க கட்சி செய்துள்ளார்.

14) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டியது இம்மனு அனுமதிக்கத்தக்கதா ? இல்லையா ? என்பதேயாகும்.

(i) மனுதாரர்களின் கட்சியின் படி மனுதாரர்கள் வழக்கு சொத்தில் உரிமை மூலத்தினை முழுமையாக நீதிமன்றத்தில் வாதுரைக்காமல் தாக்கல் செய்துள்ள வழக்கு முக்கிய சங்கதிகளை மறைத்த (supersion of material fact)



ANAND M Digitally signed by ANAND M Date: 2025.02.07 16:30:12 +0530

காரணத்திற்காகவும், மேற்கண்ட உரிமை மூலத்தினை முழுமையாக குறிப்பிடாமலும், மனுதாரர்கள்/பிரதிவாதிகளின் மேற்படி பொன்தாஸ் காங்கேயருக்கு இறங்கு வழி கிடைக்கப்பெற்ற உறவுமுறை குறித்து எவ்வித வாதுரையும் குறிப்பிடாமல் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு Abuse process of law என்ற காரணத்திற்காகவும் தள்ளுபடி செய்யபட வேண்டியது என்று கட்சி செய்யப்பட்டுள்ளது.

(ii) எதிர்மனுதாரர் தரப்பில் மேற்கண்ட மனுதாரர்களின் வாதுரை மனுதார்கள் குறிப்பிடப்பட்டதும், மனுதாரர் ஆவணங்களை உற்பத்தி செய்துள்ளதாகவும், இந்த எதிர்மனுதாரர் தனது உரிமையினை பொறுத்து வழக்கு தாக்கல் செய்துள்ளதாக கட்சி செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட சங்கதிகள் உ.ந.ச. பிரிவு 7 .கட்டளை 11 ஐ பார்ப்பது அவசியமாகும்.

*The plaint shall be rejected in the following cases-*

*(a) where it does not disclose a cause action;*

*(b) where the relief claimed is undervalued, and the plaintiff, on being required by the Court to correct the valuation within a time to be fixed by the Court, fails to do so;*

*(c) where the relief claimed is properly valued, but the plaint is returned upon paper insufficiently stamped, and the plaintiff, on being required by the Court to supply the requisite stamp-paper within a time to be fixed by the Court, fails to do so; (d) where the suit appears from the statement in the plaint to be barred by any law:*

*Provided that the time fixed by the Court for the correction of the valuation or supplying of the requisite stamp-paper shall not be extended unless the Court, for reasons to be recorded, is satisfied that the plaintiff was prevented by any cause of an exceptional nature form correcting the valuation or supplying the requisite stamp-paper, as the case may be, within the time fixed by the Court and that refusal to extend such time would cause grave injustice to the plaintiff.*

மேற்கண்ட பிரிவின் படி ஆராய்கையில் அசல் பிராது முதல்நிலையில் காரண காரியம் மற்றும் வழக்கு மூலத்துடன் உள்ளது. முதல்நிலை நோக்கில் அது முக்கிய வாதுரை



ANAND M
Digitally signed by ANAND M
Date: 2025.02.07 16:30:21 +0530

அல்லது சங்கதிகளை மறுக்கப்பட்டுள்ளதா என்பதை எழுவினாவின் அடிப்படையிலேயே தீர்வு காண இயலும். மேலும்

> *Gurder Singh Vs Harvinder Singh " For dealing with an application under order 7 rules 11 cpc, only the avernments made in the plaint and the documents produced along with the plaint are required to be seen. The defense of the defendants cannot be even looked into. When the ground pleaded for rejection of the plaint is the absence of cause of action, the court has to examine the plaint, and see wheather any cause of action has been disclosed in the plaint – merely because there were some inconsistent avernments in the plaint that was not sufficient to come to conclusion that the cause of action was not disclosed in the plaint" 2023 Live Law (SC) 311.*

என்ற உச்சநீதிமன்ற முன்தீர்ப்பின் அடிப்படையில் இம்மனு நிலைக்கத்தக்கது அல்ல என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

**இறுதியாக.** இம்மனுவை செலவுத்தொகையின்றி தள்ளுபடி செய்து உத்தரவிடுகிறது.

இம்மனுவை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின் திருத்தம் செய்யப்பட்டு 2025 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 07-ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

ANAND M Digitally signed by ANAND M Date: 2025.02.07 16:30:26 +0530

மாவட்ட உரிமையியல் (ம)

நீதித்துறை நடுவர், இராதாபுரம்.

**<u>மனுதாரர்கள்/1,2 பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிகள்;</u>** இல்லை

**<u>மனுதாரர்கள்/1,2 பிரதிவாதிகள் தரப்பில் சான்றாவணங்கள்</u>** இல்லை

**<u>எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் சாட்சிகள்:</u>** இல்லை

**<u>எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் சான்றாவணங்கள்:</u>** இல்லை

ANAND M Digitally signed by ANAND M Date: 2025.02.07 16:30:32 +0530

மாவட்ட உரிமையியல் (ம)

நீதித்துறை நடுவர், இராதாபுரம்.

மா.உ.ம.கு.ந.நீதிமன்றம்,

இராதாபுரம்.

இடைமனு எண் 03/2024-ன்

அசல் வழக்கு எண். 56/2022

உத்தரவு

நாள் : 07.02.2025